

'மியாட்' மருத்துவமனையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள, ரத்த நன்கொடையாளர்களிடம் இருந்து ரத்தத்தின் உட்பொருட்களை மட்டும் பிரித்து எடுக்கும் சர்வதேச அளவிலான அதி நவீன கருவியை, எம்.ஆர்.எப். நிறுவனத்தின் இயக்குனர் அம்பிகா மேமன், மருத்துவமனை தலைவர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், மருத்துவமனையின் இயக்குனர் மல்லிகா மோகன்தாஸ் ஆகியோர் பார்வையிட்டபோது எடுத்த படம்.

# சர்வதேச தரத்துக்கு ஏற்ற வகையிலான நவீன ரத்தம் ஏற்றும் மருத்துவத்துறை

## 'மியாட்' மருத்துவமனையில் தொடங்கப்பட்டது

சென்னை, ஜன.19–

சென்னை மணப்பாக்கத்தில் இயங்கி வரும் 'மியாட்' மருத்துவமனையில், சர்வதேச தரத்திலான நவீன ரத்தம் ஏற்றும் மருத்துவத்துறை நேற்று தொடங்கப்பட்டது.

### நோய் தொற்றால் அவதி

ரத்த ஏற்றம் என்றதும் நம் அனைவர் கண்முன் வருவது, ரத்ததான முகாம்கள் மற்றும் ரத்த நன்கொடையாளர்களிடம் இருந்து ரத்தத்தை எடுத்து ரத்த வங்கிகளில் சேமித்தல், அவ்வாறு சேமிக்கப்பட்ட ரத்தத்தை தேவைப்படும் நோயாளிகளுக்கு ஏற்றுதல் என்பது தான். தற்போது ரத்த ஏற்ற மருத்துவத்திற்கு முக்கியத்துவம் அதிகரித்து, அது அடுத்த கட்ட நிலையை அடைந்துள்ளது.

முன்பு, நோயினால் பாதிப்படைந்த ஒருவருக்கு ரத்தம் தேவை என்றால் ரத்த வங்கியில் இருந்தோ, அல்லது ரத்த நன்கொடையாளர்களிடம் இருந்தோ ரத்தத்தை பெற்று அப்படியே நோயாளிகளுக்கு ஏற்றுவது வழக்கம். இதனால் பெரும்பாலானோர் நோய் தொற்று ஏற்பட்டு அவதி அடைவார்கள்.

### சர்வதேச தரத்தில்...

தற்போது, நவீன மருத்துவ முறையில், ரத்தத்தின் உட்பொருட்கள் பிரிக்கப்பட்டு தேவையானவற்றை மட்டும் நோயாளிகளுக்கு அளிக்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. இந்த நிலையில், சென்னை போரூரில் இயங்கி வரும் 'மியாட்' மருத்துவமனையில், சர்வதேச தரத்துக்கு ஏற்ற நவீன ரத்தம் ஏற்றும் மருத்துவத்துறை நேற்று திறக்கப்பட்டது.

இது 5 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில், 15 சோதனை கூடங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கு என 4 கோடி ரூபாய் அளவில் நவீன எந்திரங்களும், ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

### ரிப்பன் வெட்டி திறப்பு

இந்த நவீன மருத்துவத்துறையை எம்.ஆர்.எப். டயர் நிறுவனத்தின் இயக்குனர் அம்பிகா மேமன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்த விழாவில், 'மியாட்' மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் செழியன் சுபாஷ், 'மியாட்' மருத்துவமனை ரத்த ஏற்று மருத்துவத்துறை தலைவர் டாக்டர் ஜோஷு டேனியல் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

முன்னதாக டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் வரவேற்புரையாற்றினார். முடிவில் 'மியாட்' மருத்துவமனையின் இயக்குனர் மல்லிகா மோகன்தாஸ் நன்றி உரையாற்றினார். விழாவில் டாக்டர் மோகன் தாஸ் பேசியதாவது:–

### உட்பொருளை பிரித்தெடுக்கும் நவீன கருவி

ரத்தத்தில் பிளாஸ்மா, ரத்த தட்டுகள், ரத்த சிவப்பணுக்கள் மற்றும் ரத்த வெள்ளையணுக்கள் என பல்வேறு உட்பொருட்கள் உள்ளன. இதில் நோயாளியின் ரத்தத்தில் எந்த பகுதி பாதிப்படைந்துள்ளது என்பதை கண்டறிந்து அந்த பகுதியை மட்டும் செலுத்தும் நிலை தற்போது உள்ளது.

அதன்படி, ரத்த நன்கொடையாளர்களிடம் இருந்து ரத்தத்தை பெறும்போதே, தேவையான உட்பொருட்களை மட்டும் பிரித்து எடுக்கும் சர்வதேச அளவிலான புதிய நவீன கருவி 'மியாட்' மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ளது.

### சலித்தல் மற்றும் வடிகட்டுதல்

இதனால், நோயாளிகளுக்கு ரத்தத்தை அப்படியே ஏற்றுவதன் மூலம் தொற்றுகள் ஏற்படும் அபாயம் தவிர்க்கப்படுகிறது. மேலும் பலமுறை ரத்தம் ஏற்றப்பட்ட நோயாளிகளுக்கு மீண்டும் ரத்த ஏற்றம் செய்யும் போது, ரத்தத்தின் வெள்ளை அணுக்கள் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். இதனால் நோய் எதிர்ப்பு திறன் குறைவதுடன், நோயாளியின் உயிருக்கு ஆபத்து நேரிடும்.

எனவே, இந்த புதிய கருவியை கொண்டு, 'லூக்கோ பில்டர்' என்ற ரத்தத்தை சலித்தல் மற்றும் வடிகட்டுதல் மூலம் நோய் தொற்றுகளை உருவாக்கும் 'இ.பி.வி.' மற்றும் 'சி.எம்.வி.' போன்ற வைரஸ்களை நீக்குவதன் மூலம் ரத்தம் ஏற்றுதலில் ஏற்படும் எதிர்விளைவுகளை குறைக்க முடிகிறது.

### 100 சதவீதம் வடிகட்டப்பட்டது

'மியாட்' மருத்துவமனையில் ரத்ததானம் மூலம் பெறப்பட்ட அனைத்து வகை ரத்தங்களும், சர்வதேச தரத்திற்கு ஏற்ப 'லூக்கோ பில்டர்' முறைப்படி, வெள்ளை அணுக்கள் 100 சதவீதம் வடிகட்டப்பட்டு சேமித்து வைக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நவீன கருவியின் மூலம் ரத்த தட்டுகளை பிரித்தெடுப்பதன் மூலம் 300 மில்லி லிட்டர் வரை ஒரே நன்கொடையாளரிடம் இருந்து பெற முடியும். பழைய முறைப்படி என்றால் ஒருவரிடம் இருந்து 50 மில்லி லிட்டர் மட்டுமே எடுக்க முடியும். மேலும் புதிய முறைப்படி, வாரம் 2 முறை ரத்த தட்டுகளை தானம் செய்யலாம் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

### புதிய மைல் கல்

இந்த நிகழ்ச்சியில், ஏராளமான டாக்டர்கள், நர்சுகள் மற்றும் ரத்த நன்கொடையாளர்கள் பலர் கலந்து கொண்டனர். மருத்துவத்துறையில் சவால் மிக்க அறுவை சிகிச்சைகள், புதிய தொழில்நுட்ப யுக்திகளை அறிமுகப்படுத்தி வரும் 'மியாட்' மருத்துவமனை தற்போது, சர்வதேச அளவிலான நவீன ரத்தம் ஏற்றும் மருத்துவத்துறையை தொடங்கியதன் மூலம் மருத்துவத்துறையில் மேலும் ஒரு புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.